# இந்து திருமணச் சடங்கு முறைகளில் பால் சமத்துவம்: ஓர் ஆய்வு

**ப. தாரணி**

மொழித் துறை, கலை கலாசார பீடம்
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

*thaaranipancha@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்:** *பாலின சமத்துவம் என்பது சுதந்திரம், சுயநிர்ணயம், சமயம், மொழி, பண்பாடு, கலாசாரம், கல்வி, சிந்தித்தல் போன்ற விடயங்களை ஆண்களும் பெண்களும் சமனான அளவில் பெற்று செயற்படலாகும். புண்பாடு தொடக்கம் மொழி வரையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம அளவு உரிமை காணப்படல் அவசியமாகும். அதன் அடிப்படையில் பண்பாடு, கலாசாரம், போன்றவற்றின் பால் சமத்துவம் பேணப்படுவதைக் காணலாம். அவைதீகநெறி என போற்றப்படுகின்ற இந்துசமயம் பல கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் தத்துவங்களையும் எடுத்துக் கூறுகின்ற மதமாக காணப்படுகின்ற அதே வேளையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான சமத்துவ தன்மையினையும் கோட்பாடுகள், கொள்கைகள் ஊடாக வெளிக்காட்டுவதையும் காணலாம். இந்து பண்பாட்டு கலாசார கோலங்களில் சடங்கு முறைகள் செல்வாக்கு பெற்றன. அவற்றுள் மக்கள் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த சடங்காக திருமணச்சடங்கு காணப்படுகிறது. திருமணம் என்பது ஆணும் பெண்ணும் இணைதலாகும். இந்து திருமணச்சடங்கு முறையில் பால் சமத்துவம் பேணப்டுவதை நாம் காணலாம். திருமண நிகழ்வின் போது இடம்பெறும் சடங்குகள், சம்பிரதாயங்கள், கிரியைகள் ஊடாக பால் சமத்துவம் வெளிப்படுவதை நோக்கலாம். ஆணும் பெண்ணும் இணையும் போது அவர்களிடையே அனைத்து விடயங்களிலும் சமனான நிலை காணப்படும் போது தான் அவர்களின் இல்லற வாழ்க்கை சிறக்கும். வாழ்வின் தொடக்கமாக அமைவது திருமணம். திருமணம் வழியே ஆணுக்கும் பெண்ணுக்கும் பால் சமத்துவம் பேணப்படுவது சிறப்பிற்க்குரியதாகும். இந்து திருமணச் சடங்கு முறைகள் சம்பிரதாயங்கள், சடங்கு முறைகளின் அடிப்படையில் நிகழ்வதாகும். அத் திருமணச் சடங்களில் ஆண் பெண் சமத்துவம் பின்பற்றபடுகின்றதா? என்பது ஆய்வுப் பிரச்சினையாக கொள்ளப்படுகிறது. திருமணச் சடங்கு முறைகளில் பால் சமத்துவும் பின்பற்றப்படுவதை இனங்கண்டு வெளிப்படுதல் பிரதான நோக்கமாக கொள்ளப்படுகிறது. இவ் ஆய்வில் பகுப்பாய்வு, விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, அடிப்படை ஆய்வு போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆண் பெண் சமத்துவம் என்பது இருபாலாருக்கும் உரியதான உரிமையாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் தகுந்த சமமான உரிமை வழங்கப்படும் போது சமூகம் நல்முறையில் உருவாகும்.*

**திறவுச்சொற்கள்** - பால்சமத்துவம், திருமணச்சடங்கு, ஆண், பெண்

## 1. அறிமுகம்

பாலின சமத்துவம் என்பது அடிப்படை மனித உரிமையாகும். ஆண், பெண் இருவரும் உள்ளடங்கலாக பாலினம் எனும் சொல்லால் வகைக்குறிக்கப்படுகின்றனர். பாலினம் என்பது சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட பண்புகளை உடைய ஆண்கள் அல்லது பெண்கள் குழுவினரைக் குறிக்கும். பாலின சமத்துவம் என்பது ஆண்கள், பெண்கள் இருபாலினரும் அனைத்து விடயங்களிலும் சமனான உரிமைகள் பெற்று செயற்படலாகும். அவ் வகையில் இருபாலாரும் அடிப்படை உரிமைகள் அனைத்திலும் சமத்துவத் தன்மையைப் பெற்றிருத்தல் பால் சமத்துவமாகும். அதாவது சுதந்திரம், சுயநிர்ணயம், பண்பாடு, சமயம், மொழி, கல்வி, கலாசாரம், கருத்து தெரிவித்தல், சிந்தித்தல், உரிமை பெறல் போன்ற அடிப்படை உரிமைகளில் சமத்துவ தன்மையினை இரு பாலாரும் பெறல் பால் சமத்துவம் அல்லது ஆண் பெண் சமத்துவம் எனப்படும்.

இந்து சமயம் தொன்மையான வரலாற்றினைக் கொண்ட சமயநெறியாகும். இந்துசமயம் பல வகையான சடங்கு முறைகளையும் பண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்து மக்கள் பின்பற்றும் மங்களகரமான சடங்கு முறைகளில் முதல் நிலையில் காணப்படும் சடங்காக திருமணச் சடங்கு முறை காணப்படுகிறது. இந்து சமயம் ஆணையும் பெண்ணையும் திருமணச்சடங்கின் மூலம் ஒன்றிணைத்து அவர்களுக்கு இல்லற வாழ்க்கையினை வழங்குகின்றது. அர்த்தநாரீஸ்வர வடிவம் கொண்ட இறைவன் மானிடர்களுக்கு பால் சமத்துவ நிலையினை வெளிப்படுத்தி காட்டுகிறார். திருமணம் மூலம் இணையும் மணமக்கள் அர்த்தநாரீஸ்வர வடிவம் உணர்த்தும் தத்துவ நிலையில் வாழ்க்கை வாழ வேண்டும் என இந்து சமயம் வலியுறுத்துகின்றது. திருமணச் சடங்கு நிகழ்வின் பல சடங்கு முறைகளில் ஆண் பெண் சமத்துவத் தன்மை வெளிக் காட்டப்படுவதைக் காணலாம்.

திருமணம் திரு+மணம் என பிரித்துப் பொருள் கொள்ளப்படுகின்றது. திரு என்பது தெய்வத் தன்மை எனவும் மணம் என்பது இணைதல் எனவும் பொருள்படும். ஆந்த வகையில் திருமணம் என்பது ஆணும் பெண்ணும் தெய்வ தன்மை பொருந்திய வகையில் இணைதல் திருமணம் எனப்படும். இந்துத் திருமணம் ஆகம மரபுச் சடங்குகளுடன் சில சிறப்பு அம்சங்களையும் தழுவி பண்டைய காலம் தொடக்கம் இன்றை கால கட்டம் வரையில் நடைபெறுகின்றமையைக் காணலாம்.

**“அன்பும் அறமும் உடைத்து ஆயின், இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.” (குறள் - 45)**

எனும் குறளுக்கு இணைய குடும்ப வாழ்க்கையில் கணவன் தன் மனைவியிடம் அன்பு காட்டுவதும் மனைவி தன் கணவனிடம் அன்பு காட்டுவதும் இல் வாழ்க்கையின் பயனாகும். அன்பு காட்டல் கணவன் மனைவியின் அன்னியோன்ய தன்மையை எடுத்துக் காட்டுகிறது. அன்பு வழியே திருமணத்தில் பால் சமத்துவம் பேணப்படுவதைக் காணலாம்.

### 1.1 ஆய்வுப் பிரச்சினை

இந்து திருமணச் சடங்கு முறைகள் சம்பிரதாயங்கள், சடங்கு முறைகளின் அடிப்படையில் நிகழ்வதாகும். அத் திருமணச் சடங்களில் ஆண் பெண் சமத்துவம் பின்பற்றபடுகின்றதா? என்பது ஆய்வுப் பிரச்சினையாக கொள்ளப்படுகிறது.

### 1.2 ஆய்வின் நோக்கம்

திருமணச் சடங்கு முறைகளில் பால் சமத்துவம் பின்பற்றப்படுவதை இனங்கண்டு வெளிப்படுதல் பிரதான நோக்கமாக கொள்ளப்படுகிறது. இந்து திருமணச் சடங்கு முறைகளை எடுத்துரைத்தல், திருமணம் பற்றி எடுத்துரைத்தல் துணை நோக்கங்களாகவும் கருதப்படுகின்றன.

## 2. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வில் பகுப்பாய்வு, விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, அடிப்படை ஆய்வு போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருமணச் சடங்குகள் பற்றி ஆராய்ந்து

அறிவதற்க்கு விபரண ஆய்வு முறையும் திருமணச் சடங்கு முறைகளை ஒரு ஒழுங்கு முறையில் இனங்கண்டு அவற்றில் பால் சமத்துவம் பற்றிய கருத்துக்களை இனங்கண்டு வெளிப்படுத்த அடிப்படை ஆய்வு முறையும் பகுப்பாய்வு முறையும் ஆதி காலம் தொடக்கம் தற்காலம் வரையில் திருமணச் சடங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களை இனங்கண்டு அவற்றின் வழியே பால் சமத்துவம் பற்றிய தகவல்களை பெற வரலாற்று ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட உள்ளன.

### 2.1 தரவு சேகரிப்பு முறை

இவ் ஆய்வுக்கான தரவுகள் முதல் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் மூலம் பெறப்பட்டன. திருமணம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், திருமணச் சடங்கு முறைகளை எடுத்துரைக்கும் நூல்கள், பால் சமத்துவம் தொடர்பான இலக்கியங்கள் முதல் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக பால் சமத்துவ கோட்பாடுகள், சமத்துவ உரிமைகள், சடங்கு முறைகள் பற்றி பத்திரிகை, ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த குறிப்புகள் பயன்படுத்தப்பட்டன.

### 2.2 இலக்கிய மீளாய்வு

- நாமாவோம் எனும் நூலின் ஊடாக சமத்துவம், பால் சமத்துவம், ஆணுக்கும் பெண்ணுக்குமான சமனான உரிமைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொண்டேன்.
- அருணாச்சலம் சோமசுந்தரம் அவர்களின் இந்து வாழ்வியற் சடங்குகள் என்ற நூலின் ஊடாக திருமணச் சடங்கு முறைகள், சடங்கு முறைகளில் பின்பற்றப்படுகின்ற சம்பிரதாயங்கள் பற்றி அறிந்து கொள்ள முடிந்தது.
- முகுந்தன் எழுதிய இந்து வாழ்வியல் சடங்குகளில் உளவியல் எனும் ஆய்வு கட்டுரையின் ஊடாக திருமணச் சடங்கில் ஆண் பெண் சமத்துவம், ஆண் பெண் நிலை போன்ற தகவல்களைப் பெற்றுக் கொண்டேன்.
- திருமண பந்தத்தில் கணவன் மனைவி எனும் இலக்கியத்தின் ஊடாக திருமணம் பற்றியும் கணவன், மனைவி சமத்துவம் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொண்டேன்.

## 3. இந்து திருமணச் சடங்கு முறைகளில் பால்சமத்துவம் வெளிப்படுத்தப்படும் விதம்

இந்துப் பண்பாட்டினை பிரதிபலிப்பது சடங்குகளும் சம்பிரதாயங்களுமாகும். வழி வழியாக வரும் மரபுகளைக் காத்தல் மனித இனத்தின் வேரூன்றிய செயலாகும். சடங்குகள் இப் பணிக்கு பெரிதும் உதவுகின்றன. இந்து சமயத்தில் இந்து மக்களினால் உண்மையான உணர்வுடன் மனம் ஒன்றிச் செயற்பட்டால் விரைவில் சடங்குகள் பலன் தரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. இந்துக்களின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்குகள் பின்னிப் பிணைந்துள்ளன. வாழ்க்கையில் இன்பத்தை பெற்றுக் கொள்ளல், துன்பத்தைப் பகிர்தல், கடமைகளை உணர்ந்து செயலாற்றி வாழ்வை பயனுள்ளதாக்குதல், ஒருவருக்கொருவர் உதவுதல், உறவுகளை வலுப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற சடங்குகள் உதவுகின்றன. இவ்வகையில் சமயச்சடங்குகள், பிறப்புச்சடங்குகள், திருமணச்சடங்குகள், இறப்புச்சடங்குகள் என்பன இந்து வாழ்வியல் சடங்குகளாக அமைகின்றன.

மனித வாழ்வில் திருமணம் முக்கியமானது. இருவரின் ஒருமித்த கருத்தொற்றுமையால் நடக்கும் திருமணத்துக்கு பெரியோர்களின் ஆசியும் அங்கீகாரமும் பெறும் பொருட்டு நிகழ்தப்படும் நிகழ்வு திருமணச்சடங்காகும். இந்து மக்கள் திருமணத்தை சமயச் சடங்காக நடாத்துவது பண்டுதொட்டு நிலவி வரும் வழமையாகும். திருமணச் சடங்கு முறைகள் பற்றி இந்து இலக்கியங்கள் பல எடுத்துரைக்கின்றன. திருமணச் சடங்கு நிகழ்விலே பல்வேறுபட்ட வாழ்க்கை தத்துவங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. அந்தவகையில் ஆண் பெண் இணைந்து உருவாக்கப்படும் திருமண பந்தத்தின் முக்கிய அம்சமாக சமத்துவ நிலை கொள்ளப்படுகிறது. அதாவது பால் சமத்துவம் திருமணம் மூலம் இருபாலாருக்கும் இடையில் மிக வலுவுடைய பிணைப்பினை ஏற்படுத்துகின்றது. சமத்துவம் என்பது மக்களை நியாயமான

முறையில் நடத்துவதைக் குறிக்கின்றது. ஆண்-பெண், மகள்-மகன், சிறுவன்-சிறுமி, இளைஞன்-யுவதி, கணவன்-மனைவி, தந்தை-தாய், தலைவன்-தலைவி எனும் மேற்படி ஒழுங்கு வரிசை ஒழுங்கே பால் சமத்துவமாகும். திருமணம் மூலம் உருவாகும் கணவன் - மனைவி உறவு முறை பால் சமத்துவத்தினை பிரதிபலிக்கின்றது.

பெற்றோர் தம் பிள்ளைகள் பருவம் அடைந்ததும் அவர்கள் வாழ்வின் உறுதிப் பொருளான அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை பெறுவதற்க்குரியதாகிய இல்லறத்தை மேற்க் கொள்ள திருமணத்தை நடத்த வேண்டும். ஓத்த பண்பும் ஒத்த வயதும் ஒத்த உடல் வளமும் ஒத்த உளநலமும் ஒத்த உணர்வுகளும் நல் வாழ்வுக்கேற்ற ஜாதகப் பொருத்தமும் பார்த்து திருமணம் செய்து வைக்கப்படும். திருமணச் சடங்கின் முக்கிய குறிக்கோளே பால் சமத்துவத்தினை வெளிக்காட்டுவதைக் காணலாம். கணவன் - மனைவி பந்தத்தினை வழங்கும் திருமணச் சடங்கு பல்வேறு நிகழ்வுகளை கொண்டுள்ளது. திருமணச்சடங்கு முறைகளில் பால் சமத்துவம் தொடர்பான கருத்துக்கள் காணப்படுகின்றன. அத்தகைய சடங்கு முறையில் எவ்வாறு பால் சமத்துவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பது பற்றி ஒவ்வொரு சடங்களின் ஊடாக நோக்குவோம்.

### 3.1 ஜாதக பொருத்தம்

இந்து திருமணச் சடங்கின் முதல் அத்தியாயம் இதுவாகும். முதல் அத்தியாயத்திலேயே பால்நிலை சமத்துவத்தின் அடிப்படை உரிமைகள் எடுத்துரைக்கப்படுவதைக் காணலாம். ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணத்துக்கு முன்பு ஜாதகப் பொருத்தம் இரு வீட்டாரும் பார்பார்கள். ஜாதப பொருத்தத்தில் மொழி, வயது, கல்வித் தகமை, பொருளாதாரம், அழகு, ஒழுக்கம் போன்ற விடயங்களில் சமமான தன்மை காணப்படுகின்றதா என்பதனைக் கண்டறிதலே இச் சடங்கு முறையாகும். ஜாதக பொருத்தத்தின் போது ஆணின் தகுதிக்கேற்ப பெண்ணும், பெண்ணின் தகுதிக்கேற்ப ஆணையும் தெரிவு செய்து திருமணம் நிச்சயிப்பார்கள். இருவரின் அடிப்படை உரிமைகள், அம்சங்களில் சமநிலைத் தன்மை ஜாதகப் பொருத்தத்தில் பேணப்படுவதால் இச் சடங்கு முறையில் பால் நிலை சமத்துவம் பேணப்படுவதைக் காணலாம்.

### 3.2 பொன்னுருக்கல்

திருமண நாளுக்கு முன்பு ஒரு சுப நாளில் மணமகன் இல்லத்தில் அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் சடங்கு இடம்பெறும். பேண் வீட்டார் ஓர் இனிப்புப் பண்டம் ( கொழுக்கட்டை) கொண்டு செல்லல் சம்பிரதாயமாகக் கருதப்படுகிறது. பொன்னுருக்கல் நிகழ்வில் பால் சமத்துவம் பேணப்படுவதை பின்வரும் சடங்கின் ஊடாக அறியலாம். “ பொன்னுருக்கல் நிகழ்வு முடிந்த பின் இடம்பெறும் விருந்துபசார நிகழ்வில் மணமகன் வீட்டிலிருந்து தோழி விருந்தில் ஒரு பகுதியை மணமகளின் வீட்டிற்குச் சென்று மணமகளிற்கு கொடுப்பார்.” இந் நிகழ்வின் மூலம் மணமகனுக்கு உள்ள உரிமையானது மணமகளுக்கும் கிடைக்கப் பெறுவது ஆண் பெண் சமத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

### 3.3 கன்னிக்கால் ஊன்றுதல்

மணப் பெண் வீட்டிலும் மணமகன் வீட்டில் அவர்களின் வளவில் வடகிழக்கு மூலையில் மூகூர்த்தக்கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். இரு வீட்டார் மத்தியில் இவ் சடங்கு முறை பேணப்படுவது ஆண் பெண் சமத்துவத்தினை பிரதிபலிக்கின்றது.

### 3.4 பந்தல் அமைதல்

பந்தல் அமைக்கும் பொருட்கள் உணர்ந்தும் தத்துவத்தின் அடிப்படையிலும் பால் சமத்துவம் பேணப்படுவதை அவதானிக்கலாம். வாழைமரம் ஒரு முறை தான் குலை போடும் அது போல் எமது வாழ்விலும் திருமணம் ஒரு முறைதான் என ஆணுக்கும் பெண்ணுக்கும் உணர்த்துவதற்காகவே பந்தல் அமைக்கும் போது வாழைமரம் கட்டப்படுகிறது. இருவருக்கும் பொதுவாக ஒரு விடயம் முன்வைக்கப்படும் போது அங்கு சமத்துவ நிலை வெளிப்படுவதைக் காணலாம். பந்ததில் கட்டப்படும் இன்னொரு முக்கியமான அம்சம் பாக்கு குலைக் கட்டலாகும். பாக்கு கொத்து கொத்தாகக் காய்ப்பது போல தம்பதிகள் இருவரும் தங்களுக்குள்ளே ஒற்றுமையோடு சமத்துவமாக காணப்பட வேண்டும் என உணர்த்துகிறது.

### 3.5 மணமகன் அழைப்பு (பால் அறுகு வைத்தல்)

மூன்று, ஐந்து, ஏழு என்ற எண்ணிக்கையில் அவரவர் இல்லத்தில் ஆண்களாலும் பெண்களாலும் தலையில் பால் அறுகு வைக்கப்படும். மணமகனுக்கும் மணமகளுக்கும் ஓரே விதமான சடங்கு நடைபெறுவதில் இருந்தும் சரி சமமான முறையில் ஆண்களாலும் பெண்களாலும் பால் அறுகு அவர்களின் தலையில் வைக்கப்படுவதிலும் இருந்தும் சமத்துவம் வெளிக்கக் காட்டப்படுவதை இச் சடங்கு முறையில் இருந்து காணலாம்.

### 3.6 மணமகன், மணப்பெண் புறப்படுதல் (வரவேற்றல்)

மணமகன் திருமண மண்டபத்தினுள் நுழையும் போது மணமகள் வீட்டாரினால் ஆரத்தி எடுத்து பிற சம்பிரதாயங்கள் மேற்கொள்ளப்பட்டு அழைத்து வரப்படுவார்கள். அது போலவே மணமகள் திருமண மண்டபத்தினுள் நுழையும் போது மணமகன் வீட்டாரினால் ஆரத்தி எடுத்து மாப்பிளை வீட்டார் மூன்று தட்டங்களில் மங்களப் பொருட்களுடன் வந்து மணப் பெண்ணை விருந்தோம்பி அழைத்துச் செல்வார்கள். இங்கு மணமகளுக்கு வழங்கப்படும் மரியாதையானது மணமகளுக்கும் வழங்கப்படுவதிலிருந்து ஆண் பெண் சமத்துவம் புலனாகிறது.

### 3.7 மாலை மாற்றுதல்

மாலை மாற்றுதலின் பொருள் இரு மனம் கலந்து ஒரு மனமாகி இல் வாழ்க்கை ஆரம்பித்தலாகும். மூன்று முறை மாலை மாற்றல் சடங்கானது இடம்பெறும். இச் சடங்கு முறையில் ஆணும் பெண்ணும் மனதாலும் உடம்பாலும் உன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்ற ஆண் பெண் சமத்துவம் வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம்.

### 3.8 பால் பழம் கொடுத்தல்

பால், வாழைப்பழம் கலந்து மணமகள் முதலில் மணமகனுக்கு மூன்று முறை கொடுப்பார். பின் மணமகன் மணமகளுக்கு மூன்று முறை கொடுப்பார். முதன் முதலில் தம்பதிகளுக்கு கொடுக்கும் பதார்த்தம் இனிப்பு பதார்த்தமாகையால் வாழ்க்கை இனிமையாக இருக்க வேண்டும் என்பதோடு கணவன் மனைவி உறவில் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பதனை உணர்த்தும் சடங்காக பால் பழம் கொடுத்தல் சடங்கு அமைகிறது.

### 3.9 பாணிக்கிரகணம் (கைபிடித்தல்)

தருமம் செய்வதற்காகவும் சந்ததி விருத்திக்காகவும் திருமணம் செய்யப்படுகின்றது. பாணிக்கிரகணம் என்றால் மணமகளின் கையை மணமகன் பிடிப்பதும் மணமகனின் கையை மணமகள் பிடிப்பதும் என்று பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது ‘‘நீயும் நானும் முதுமையடைந்து விட்டாலும் கூட ஒருவரை விட்டொருவர் பிரியாதிருப்போம் என்று உன் கையை பிடிக்கிறேன்’’ என்று எண்ணி இருவரும் கையைப் பற்றிப் பிடிப்பார்கள். மணமகளின் ஜம்புலன்களால் செய்யப்படும் செயல்களுக்கு மணமகனுக்கே உரிமை உண்டு எனவும் மணமகனின் ஜம்புலன்களால் செய்யப்படும் செயல்களுக்கு மணமகளுக்கே உரிமை உண்டு என்பதனை ‘‘கைபிடித்தல்’’ சடங்கு உணர்த்துகிறது. இங்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் மனரீதியான உணர்வுகளில் சமத்துவம் காணப்படுகின்றது என்பதனை இச் சடங்கு நிகழ்வு எடுத்துக் காட்டுகிறது.

### 3.10 ஏழடி நடத்தல்

பெண்ணின் வலது கையை மணமகன் கையால் பிடித்து ஏழு அடி நடத்தல் இச் சடங்கு முறையாகும். இருவரும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு மந்திரம் புரோகிதரால் உச்சரிக்கப்படும். ஒவ்வொரு மந்திர விளக்கமும் வாழ்க்கையின் தத்துவத்தினையும் வாழும் முறையினையும் கணவன் மனைவி இடையே அனைத்து விடயங்களிலும் சமத்துவ தன்மை காணப்பட வேண்டும் என்பதனையும் எடுத்துரைக்கின்றது. ஏழாவது அடி வைக்கும் போது கூறப்படும் மந்திரப் பொருளானது ‘‘ உன் வாழ்க்கையில் இடம்பெறும் அபகாரியங்கள், ஹோமங்கள் குறையின்றி நிறைவேற இறைவன் உன்னை பின் தொடர்ந்து வரட்டும். ஏழடிகள் நடந்த நாமிருவரும் நண்பர்களானோம். இருவரும் சேர்ந்து இந்த ஏழு செல்வங்களையும் ஈட்டுவோம். இன்பதுன்பங்களைச் சேர்ந்தே அனுபவிப்போம் என்னுடன் கூட வா’’ எனும் பொருளில் இம் மந்திரம் கூறப்படுகின்றது. இவ் மந்திரம் வழியே ஆணும் பெண்ணும் வாழும் காலத்தில் ஒருவருக்கொருவர் அனைத்து

செயற்பாடுகளிலும் சமமான நிலையோடு இருக்க வேண்டும் என்பதனை எடுத்துக் கூறுவதைக் காணலாம்.

### 3.11 அம்மி மிதித்தல்

பெண்ணின் வலது காலை ( எட்டாவது அடி) மணமகன் கையால் தூக்கி அம்மியில் வைத்து பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலில் மெட்டி அணிவிப்பார். அம்மிக் கல்லைப் போல் நிலையாக நின்று உங்கள் எதிரிகளை வெற்றி கொள்ளுங்கள் அப்போது தான் இருவரின் வாழ்வும் வளம் மிக்கதாக அமையும் என்று கூறப்படுகின்றது. இச்சடங்கானது மணப்பெண்ணுக்கு கற்பையும் (ஒழுக்கம்) மணமகனுக்கு ஒழுக்கத்தையும் புகட்டுகின்றது. இதன் வழியே ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒழுக்கத்தில் சமநிலை காணப்பட வேண்டும் என்பதனை அம்மி மிதித்தல் சடங்கு உணர்த்துகிறது.

### 3.12 கணையாழி எடுத்தல்

மூன்றாம் முறை அக்கினியை வலம் வரும் போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் மோதிரத்தை மணமக்கள் இருவரும் இணைந்து தேடி எடுக்க வேண்டும். இது மூன்று முறைகள் நடைபெறும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து கணையாழியை எடுத்தல் வேண்டும். இவ் சடங்கு முறையான் மணமக்கள் இருவரும் அவர்களின் வாழ்க்கையில் இடம்பெறும் செயற்பாடுகளில் நிகழ்வுகளில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்ற பால் சமத்துவத்தினை எடுத்துரைக்கின்றது.

### 3.13 அருந்ததி பார்த்தல்

மூன்றாம் சுற்றில் அருந்ததி பார்த்தல் நடைபெறும். மணமக்கள் இருவரையும் கூட்டிச் சென்று மண்டபத்தின் வடக்கு வாசலில் நின்று வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களுக்கு பூஜை செய்து அருந்ததியை மணமக்களுக்கு புரோகிதர் காண்பிப்பார். அருந்ததியைக் காண்பதன் ஊடாக மணப்பெண்ணாணவள் “ நிரந்தரக் கற்பு நட்சத்திரமாக மின்னுவேன்” என உறுதி பூணுவாள். அதே போலவே மணமகனும் நானும் ஒழுக்கத்தில் திடத்தன்மையாக இருப்பேன் என உறுதி பூணுவான். அருந்ததி பார்த்தல் தம்பதிகள் இருவருக்கும் நல்ல வாழ்க்கையும் வளத்தையும் பெறுவதற்கேயாகும். இதன் வாயிலாக கற்பு, நல்லொழுக்கம் போன்ற நற்பண்புகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் என்னும் பால்நிலை சமத்துவம் வெளிப்படுவதைக் காணலாம்.

### 3.14 பொரியிடுதல்

மணமக்கள் இருவரும் அக்கினியை மூன்று முறை வலம் வர வேண்டும். ஒவ்வொரு முறையும் வலம் வந்து மணமக்கள் கிழக்கு நோக்கி நிற்கத் தோழன் நெற்பொரியை புரோகிதரிடம் இருந்து பெற்று மணமகனின் கையில் கொடுக்க மணமகன் மணமகளின் கையில் கொடுத்து இருவரின் கைகளும் இணைந்து ஒன்றாக நெற்பொரியை ஓமகுண்டத்தில் ஈடுவார்கள். “அக்கினி பகவானே சகல செல்வங்களையும் எம் இருவருக்கும் தந்தருள வேண்டும்” என்று வேண்டி இருவரும் ஒன்றாக இணைந்து பொரியை அக்கினியில் ஈடுவார்கள். ஒற்றுமை, ஒன்றாக செயற்படல் என்பன ஆண் பெண் சமத்துவத்தின் அடிப்படை அம்சங்களாக காணப்படுகின்றன. நெற்பொரியிடுதல் சடங்கின் மூலம் பால் சமத்துவம் வெளிக் காட்டப்படுவதைக் காணலாம்.

## 4. முடிவுரை

திருமணம் என்பது இன்பம் தரும் இனிய சொல்லாகும். ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்று சேருவதே திருமணமாகும். பால் சமத்துவத்தினை கணவன் மனைவி பந்தத்தில் தொடங்கி வைக்கும் முதல் நிகழ்வே திருமண நிகழ்வாகும். அன்பு, விட்டுக்கொடுப்பு, பணிவு, கருத்தாற்றல், ஒற்றுமை, மொழி உரிமை, சுதந்திரம் போன்ற சமத்துவ உரிமைகளை கணவன் மனைவி உறவில் ஏற்படுத்தும் வகையில் திருமணச் சடங்கு முறையில் நிகழும் சடங்கு முறைகள் எடுத்துரைப்பதனைக்

காணலாம். ஜாதகப் பொருத்தம் தொடக்கம் வாழ்த்துக் கூறி அறுகு அரிசி இடுதல் வரையான திருமண சடங்கு முறைகளில் பால் சமத்துவம் வெளிப்படுவதனைக் காணலாம். சமூகம் நல்முறையில் பேணப்படுவதற்கு சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பத்தில் வாழும் கணவன் மனைவியிடத்தில் பால் சமத்துவம் பேணப்படுவதற்கு வழிகோலும் வகையில் இந்து திருமணச் சடங்கு முறைகள் காணப்படுவதனை மேல்வரும் விதத்தில் காணலாம்.

## உசாத்துணை நூல்கள்

ஷியாமளா நவம். (2006). கல்யாணம். நவம் வெளியீடு. கனடா.

கலையரசன். (2003). திருமண பந்தத்தில் கணவன் மனைவி. மறுமர்ச்சி ஒன்றியம். இறக்காமம்.

சசிவல்லி, வி.சி. (2003). தமிழர் திருமணம். உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை.

ராஜமணி, என்., திருமணப் பொருத்தம். அஷ்டலக்சுமி பதிப்பகம். சென்னை.

சிதம்பரநாதக்குருக்கள், சி. (2011). திருமணப் பொருத்தம். திருக்கணித பதிப்பகம். சென்னை.

பக்தவத்சல பாரதி. (2005). மானிடவியல் கோட்பாடுகள். ஜோதி என்டர்பிரைசஸ். சென்னை.

ஜெயபாரதி, ஜெ. (2003). நாமாவோம். காயத்திரி ஆப்செட். ஈரோடு.

*ISBN: 978-955-627-013-6*